
# திராவிடத்தால் வாழ்கிறோம்

884

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

நீரை.மகேந்திரன்

127






# இணையத் தொழிலாளர் கூடம்!

## உற்றத் தோழனாகும் அரசு

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

‘ஸ்விகி, சொமாட்டோ, டன்சோ போன்ற இணையதளம் சார்ந்த டெலிவரி நிறுவனங்களில் வேலை செய்யும் கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் தனி நலவாரியம் அமைக்கப்படும்’ என 2023-ஆம் ஆண்டு, சுதந்திர தின உரையில் அறிவித்தார் நம் முதலமைச்சர். அதன்படி, தனி நல வாரியம் உருவாக்குவதற்காக இணையம் சார்ந்த கிக் (GIG) தொழில்களை தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்ட அட்டவணையில் சேர்த்து அரசு அறிக்கை வெளியிட்டது. தவிர, தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நலவாரியம் அமைத்தும் உத்தரவிட்டார் திராவிட மாடல் நாயகர்.

கிக் தொழிலாளர்கள் என்பவர்கள் பாரம்பரிய, நீண்ட கால வேலைவாய்ப்பை விட குறுகிய கால, நெகிழ்வான வேலைகளில் ஈடுபடுபவர்களாக இருக்கின்றனர். அதாவது பாரம்பரிய முதலாளி-பணியாளர் உறவுக்கு வெளியே வேலை செய்யும் நபர்களாக இருக்கின்றனர். குறிப்பாக, கிக் தொழிலாளர்கள் எப்போது, எங்கே, எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டும் என்கிற உரிமையை அவர்களே வைத்துக்கொள்கின்றனர். கூடுதல் வருமானத்தைத் தேடும் தனிநபர்களுக்கானதாகப் பார்க்கப்பட்ட கிக் தொழில்கள், தற்போது முழுநேரத் தொழிலாளர்களுக்கான பணி வாய்ப்பாகவும் பார்க்கப்படுகிறது.

### விருப்ப ஒப்பந்தம்

இந்த வகை தொழிலாளர்களின் சுதந்திரம் என்பது அவர்களே தங்கள் வேலைநேரத்தை நிர்வகிக்கிறார்கள் என்பதுதான். ஒரு கிக் தொழிலாளி தனது காலைப்பொழுதில் ஒரு சவாரிப் பகிர்வு நிறுவனத்திற்கு வாகனம் ஓட்டுவதிலும், மதியம் உணவு விநியோக நிறுவனத்திற்கு உணவு வழங்குவதிலும், மாலையில் வேறொரு தளத்தில் கைவினைஞர் பணிகளைச் செய்வதிலும் ஈடுபடலாம்.

வலைதள உருவாக்குநர் போன்றவர்கள் ஒரு வடிவமைப்பு செய்ய ஆறு மாத ஒப்பந்தம் செய்யலாம். அதுபோல, உணவு விநியோகத்தில் இருப்பவர், அந்தக் குறிப்பிட்ட உணவு விநியோகத்துக்கு மட்டும் ஒப்பந்தம் செய்யப்படுபவராக இருப்பார். அந்தப் பணி முடிந்ததும் அவரது ஒப்பந்தம் காலாவதியாகிறது. அதனால்தான், பாரம்பரிய தொழிலாளர்கள் அனுபவிக்கக்கூடிய பணிப் பாதுகாப்பு அல்லது பணிக்கால சலுகைகளுக்கான வாய்ப்புகள் கிக் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுவதில்லை.

சென்னை போன்ற பெரு நகரங்களில் ஸ்விகி, சொமாட்டோ போன்ற உணவு சேவை விநியோக நிறுவனங்கள் 24 மணி நேர உணவு விநியோக சேவையை அளித்து வருகின்றன. இந்த நிறுவனங்களில், உணவு விநியோக வேலையில், ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த ஊழியர்கள் மழை, வெயில் போன்ற கடினமான சூழல்களிலும் விநியோகம் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது. இவர்களில் 10 சதவிகிதம் பேர் பெண்களாக உள்ளனர்.

இந்த வகை ஓய்வறையை இடமாற்றம் செய்துகொள்ளமுடியும். கிக் தொழிலாளர்களின் கருத்து மற்றும் தேவையின் அடிப்படையில் இடத்தைத் தேர்வு செய்து அங்கு இடம் மாற்றிக் கொள்ளலாம்.

ஸ்காண்டிநேவிய மினிமலிஸ்ட் பாணியில் குறைந்த இடத்தில் அழகியலுடன் அமைக்கப் பட்டுள்ளது.

பிளக் பாய்ண்ட், குடிநீர் வசதிகள் உள்ளன.




### நவீன ஓய்வறை

இந்த ஊழியர்களுக்கு குடிநீர், கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் கொண்ட அறைகள் அமைத்துத் தரப்பட வேண்டும் என கோரிக்கை எழுந்தது. அந்தக் குரலுக்கு செவி மடுத்த நம் அரசு, சென்னையின் முக்கிய சாலைகளில், ஏ.சி. ஓய் வறையை அமைக்க திட்டமிட்டது.

இந்தச் சவால்கள் இருந்தபோதிலும், கிக் பொருளாதாரம் அதிகரித்து வருவதற்கு ஏற்ப கிக் தொழிலாளர்களின் தேவையும் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில்தான் தமிழ்நாட்டில் கிக் தொழிலாளர்களின் நலனுக்காகத் திட்டமிட்டார் நம் முதலமைச்சர். முதலில் நலவாரிய அறிவிப்பும், அதைத் தொடர்ந்து இணையவழி சேவைகள் வழங்கும் தொழிலாளர்களுக்கான காத்திருப்பு அறையும் அமைக்கப்படுமென்று அறிவித் திருந்தார்.

மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், இந்தியாவிலேயே முதல்முறையாக கிக் தொழிலாளர்களுக்கான ஓய்வறையை சென்னை அண்ணா நகரில் அமைத்துள்ளது சென்னை பெருநகர மாநகராட்சி. 11.06.2025 அன்று, ‘ரிப்பன்’ மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்த ஓய்வுக்கூடத்தைத் திறந்து வைத்தார் தமிழ்நாடு துணை முதலமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

> “இந்தக் கூடம் வந்த பின்பு, சமூகம் எங்களை பார்க்கும் பார்வை என்பது முற்றிலும் வேறாக இருக்கிறது. மரியாதையாக நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள். எங்களோடு பணிபுரியும் பெண்களுக்கு அவசியமான ஒன்றாக இருக்கிறது”

அதன்படி முதற்கட்டமாக சென்னை அண்ணா நகரில் 600 சதுரஅடியில் ஓய்வறையைத் திறந்துள்ளது சென்னை மாநகராட்சி. இந்த ஓய்வறையில், 20 அடி நீளம் 10 அடி அகலத்தில் கழிவறை, குடிநீர், செல்போன் சார்ஜ் செய்யும் வசதிகள் இருக்கின்றன. 25 பேர் வரை ஒரே நேரத்தில் பயன்படுத்த முடியும். அதனுடன், 20 இருசக்கர வாகனங்கள் வரை பார்க்கிங் செய்ய முடியும்.

சோதனை அடிப்படையில், திறக்கப்பட்ட இந்த ஓய்வு இல்லத்துக்கு வரவேற்பு எழுந்துள்ள நிலையில் தற்போது இரண்டாம் கட்டமாக தியாகராய நகர், கே.கே நகர் ஆகிய இடங்களில் அமைக்க, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கு அடுத்து வேளச்சேரி, மதுரவாயல், அம்பத்தூர் ஆகிய இடங்களிலும் அமைக்க, சென்னை மாநகராட்சி திட்டமிட்டுள்ளது.

முழுவதும் குளிரூட்டப்பட்ட அறையாக, மொபைல் சார்ஜிங் வசதிகளுடன் அமைக்கப் பட்டுள்ளது. ஒவ்வொரு விநியோகத்துக்கும் இடையில் ஓய்வு எடுக்கக்கூடிய வகையில் பாதுகாப்பாக, சுகாதாரமான முறையில் இந்த அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. கிக் தொழிலாளர்கள் காத்திருப்பதற்காக பூங்கா போன்ற இடங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக, அவர்களுக்கென்று தனிச் சிறப்பாக அமைக்கப்பட்ட இந்த இடத்தில் நிம்மதியாக ஓய்வெடுக்கலாம்.

“இந்தக் கூடம் வந்த பின்பு, சமூகம் எங்களை பார்க்கும் பார்வை என்பது முற்றிலும் வேறாக இருக்கிறது. மரியாதையாக நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள். எங்களோடு பணிபுரியும் பெண்களுக்கு அவசியமான ஒன்றாக இருக்கிறது” என தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

...சாதனை தொடரும்

# ஆதிக்க இந்தி வீழட்டும்!

புதிய கல்விக் கொள்கையின்படி, மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி திட்டத்திற்கான 2 ஆயிரத்து 152 கோடி ரூபாயைத் தருவதாக ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியபோது, பத்தாயிரம் கோடி ரூபாய் தந்தாலும் மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் எனக் கூறிவிட்டார் தமிழ்நாட்டின் முதலமைச்சர். ஒரு திட்டத்தை அமல்படுத்தினால்தான், இன்னொரு திட்டத்திற்கான நிதியைத் தருவோம் என்று கூறுவது எத்தகைய சர்வாதிகாரப் போக்கு என அப்போதே கண்டனங்கள் வலுத்தன.

மேலும் மும்மொழிக் கொள்கையை ‘இந்தித் திணிப்பு’ என்று திரிபுவாதம் செய்வதாக தி.மு.க. மீது பா.ஜ.க. விமர்சனம் வைத்தது. 3-வது மொழியாக இந்தியைத் தவிர வேறெந்த மொழிக்கும் ஆசிரியர்கள் இருக்க மாட்டார்கள் என்பது ஒரு வாதம். மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் நிதி தருவோம் என்று இப்போது கூறுபவர்கள், இந்தியை அமல்படுத்தினால்தான் நிதி தருவோம் என்று நாளையே கூற மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? அதுமட்டுமல்ல, பல மாநிலங்களில் மூன்றாவது மொழியாக இந்தியைத்தான் திணித்தார்கள் என்பதற்கும் சான்றுகள் உள்ளன. எனவே, இந்தித் திணிப்புக்கு இடமளிக்க மாட்டோம் என்று உறுதியோடு எதிர்த்து நின்றது தமிழ்நாடு.

அந்த உறுதி இப்போது வடமாநிலங்களுக்கும் பரவிக் கொண்டிருக்கிறது. வரும் ஜூலை 5-ஆம் தேதி மகாராஷ்டிராவில் இந்தித் திணிப்புக்கு எதிராக பிரமாண்ட பேரணியை நடத்த விருப்பதாக சிவசேனா உத்தவ் தாக்கரே அணியும், ராஜ் தாக்க ரேவின் நவ நிர்மாண் சேனாவும் அறிவித்துள்ளன. புதிய கல்விக்கொள்கையின்படி, 1 முதல் 5-வது வகுப்பு வரை இந்தி மொழியைக் கற்பிப்பது கட்டாயம் என்கிற பா.ஜ.க. அரசின் அரசாணைக்கு அங்கு முதலில் எதிர்ப்பு வந்தது. அதன்பிறகு, ‘பொதுவான 3-வது மொழியாக இந்தி இருக்கும். 20-க்கும் மேற்பட்ட மாணவர்கள் விரும்பினால் வேறு இந்திய மொழியைப் படிக்கலாம்’ என்று விதியை மாற்றினர். இதுவும் இந்தித் திணிப்புக்குத்தான் வழிவகுக்கும் என கண்டன பேரணி அறிவிக்கப்பட்டுள்ளது. 1937-இல் தமிழ்நாடு எடுத்த நிலைப்பாட்டை, மகாராஷ்டிரா 2025-இல் எடுத்திருக்கிறது. தாமதமானது என்றாலும், வரவேற்கப்பட வேண்டியது. அவரவர் மொழியைக் காக்க அவரவர்க்கு உரிமை உண்டு.

# ஃப்ளாஷ்பேக்



## வெற்றிக்கும் தோல்விக்கும் வாழ்த்து!



ஈரோடு
இளையகோபால்

1986-ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் கழகம் மாபெரும் வெற்றி பெற்றது. ஈரோடு மாவட்டம், சூரம்பட்டி பேரூராட்சித் தேர்தலில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டார் பேரூர் கழகச் செயலாளர் சி.தனபால். ஆனால், அவருக்கு வெற்றி வாய்ப்பு கிடைக்கவில்லை. சுயேட்சையாக போட்டியிட்ட க.முருகேசன் வெற்றி பெற்றார். பிறகு அவர் கழகத்தில் இணைந்தார். வெற்றிவாய்ப்பு கைநழுவிப் போனாலும், தேர்தல் பணியாற்றிய அனைவரையும் சென்னைக்கு அழைத்து வந்து தலைவரிடம் வாழ்த்துகள் பெற வைத்தார் சி.தனபால். தலைவரின் வலதுபுறம் சூரம்பட்டி ஜோ அவர்களும் இடதுபுறம் நானும் அமர்ந்திருக்கிறோம்.

**– ஈரோடு இளையகோபால், தலைமைக் கழகப் பேச்சாளர், திராவிட முன்னேற்றக் கழகம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# நம் வரலாறு

## மகளிர் நிதியளிப்பு!

09.01.1957-இல் சென்னை கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் திராவிட மகளிர் சார்பாக, தி.மு.க. தேர்தல் நிதியாக பேரறிஞர் அண்ணாவிடம் ரூ.1,011 வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சுமார் 50 ஆயிரம் பெண்கள் பங்குபெற்றனர். அவர்கள் மத்தியில் பேசிய அண்ணா,“மக்கள் உள்ளத்தை விட சட்டசபை ஒன்றும் பெரிதல்ல. உலகில் இப்படி நமக்கு ஆதரவு தருவது போன்று வேறு எந்த கட்சிக்கு மக்கள் தருகிறார்கள்?” என பெருமையுடன் பேசினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131